BOC Smart Remit கைபேசி செயலியின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளும் நிபந்தனைகளும் இலங்கை வங்கியின் ஸ்மாட் ரெமிட்டன்ஸ் கைபேசி செயலிக்கான (இதற்குப் பின்னர் சிலநேரங்களில் 'BOC Smart Remit App' எனக் குறிப்பிடப்படும்) அணுகல் மற்றும் உபயோகத்தினை நிர்வகிக்கின்றன.

1. **BOC ஸ்மாட் ரெமிட் App பயன்படுத்துவதற்கான தகுதி அளவுகோல்கள்**

   1.1. **பயனர் அவசியம்**

   a) பாவனையாளர் வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   b) வெளிநாட்டு டெபிட் அல்லது கிரடிட் அட்டையை வைத்திருத்தல் வேண்டும்.
   c) உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு சட்டபூர்வ தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.
   d) செல்லுபடியான கடவுச் சீட்டினை கொண்டிருக்க வேண்டும்.

1.2 இலங்கை வங்கியின் விருப்பத்தின் பேரில் மற்றும் பவனையாளரின் தகுதி அளவுகோலின் அடிப்படையில் ஸ்மாட் ரெமிட் கைபேசி செயலியின் தளத்தின் ஊடாக எந்தவொரு சேவையும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் என்பதுடன், அத்தகைய சேவைகள் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டனவாகும்.

1.3 BOC Smart Remit App விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் மற்றும் கணக்கின் குறிப்பிட்ட வகைகள் அல்லது ஏதேனும்

குறிப்பிட்ட சேவை/உற்பத்தி/சலுகை என்பவற்றுடன் தொடர்புடைய குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுமாயின், அக்குறிப்பிட்ட சேவை/உற்பத்தி/சலுகை என்பவற்றினது குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நடைமுறையில் இருக்கும்.

2. பாவனையாளர் பதிவு செயன்முறை

2.1 BOC Smart Remit App சேவைகளை அணுகுவதற்கு பாவனையாளர் தனக்குச் சொந்தமான மற்றும் ஸ்மாட் ரெமிட் செயலிக்கு இணக்கமான கைபேசியில் இச்செயலியை பதிவிறக்கம் செய்யவேண்டும்.

2.2 பாவனையாளரின் அடையாளத்தை இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டுதல்களுக்கிணங்க உறுதிபடுத்துவதற்காக பாவனையாளர் அவசியமான அடையாள விவரங்களையும் புகைப்படங்களையும் வங்கிக்கு வழங்க வேண்டும்.

2.3 பாவனையாளர் அவசியமான அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் வழங்கி வங்கியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

2.4 வங்கியினால் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் மீதான அக்கறை(CDD), பணமோசடி தடுப்பு (AML) மற்றும் உங்களது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) போன்ற தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு அவற்றை கடைப்பிடித்தல் வேண்டும்.

2.5 BOC Smart Remit App உள்நுழைவதற்கான நடைமுறைகள் அல்லது தரநிலைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள வங்கியின் எந்தவொரு

அம்சத்திற்கும் பாவனையாளர் இணக்கமாக செயற்பட தவறுதல், பாவனையாளரின் சட்டப்பூர்வமான விருப்பங்கள் அல்லது நோக்கங்கள் குறித்து வங்கி சந்தேகம்படும்படியாக பாவனையாளர் நடந்துகொள்ளுதல், பாவனையாளர் தற்போதைய வசிப்பிடத்தை வங்கியால் அடையாளம் காண முடியாதிருத்தல் மற்றும் ஆவணம்/களின் நம்பகத்தன்மை குறித்து வங்கிக்கு எவ்விதத்திலேனும் நியாயமான சந்தேகம் உருவாகுதல் போன்ற விடயங்களினால் ஸ்மாட் ரெமிட் செயலியைப் பயன்படுத்துவதற்கு பாவனையாளர் கொண்டுள்ள அணுகலை தவிர்ப்பதற்கு வங்கிக்கு விருப்புரிமை உள்ளது.

3. தனிப்பட்ட அடையாள எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் ஒரு தடவை கடவுச் சொல் (OTP)

3.1 BOC Smart Remit App சேவைகளை பாவனையாளர் எந்நோக்கத்திற்காக பயன்படுத்துகின்றார் என்பதனை இனங்காண்பதற்கான தனிப்பட்ட அடையாள எண் (PIN) மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை குறிப்பிடும்போது வங்கி நிகழ்நிலையில் (Online) குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலை பாவனையாளர் பின்பற்ற வேண்டும். தனிப்பட்ட அடையாள எண் (PIN) என்பது பாவனையாளரால் இரகசியமாக உருவாக்கப்பட்ட மூல தனிப்பட்ட அடையாள எண்ணைக் குறிக்கின்றது.

3.2 குறுஞ்செய்தி சேவை (SMS) அல்லது மின்னஞ்சல் ஊடாக பாவனையாளரின் பதிவுசெய்யப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு பரிவர்த்தனையை அங்கீகரிப்பதற்காக வங்கியினால் அனுப்பப்படும் ஒரு தடவை கடவுச் சொல்லை (PIN) பாவனையாளர் வங்கியின் முழு விருப்பின்பேரில் உபயோகித்து பரிவர்த்தனையை உறுதிசெய்ய வேண்டும். பாவனையாளர் பொருத்தமான

எந்தவொரு இடத்திலும், எந்நேரத்திலும் OTP இனை உள்ளிடுவதற்கு உடன்படுகிறார். வங்கி அனுப்புகின்ற குறுஞ்செய்திகளை பெறப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு கைபேசியினது/இலக்கத்தினது அல்லது பிற இலத்திரனியல் சாதனங்களினது பாதுகாப்பிற்கு தானே பொறுப்பு என்பதை பாவனையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அனைத்து இலத்திரனியல் சாதனங்களையும் குறுஞ்செய்திகளை இரகசியமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதனை உறுதிசெய்வது பாவனையாளரின் பொறுப்பாகும்.

3.3 பாவனையாளர் ஒரு தடவை கடவுச்சொல் (OTP), உழ்நுழைவு குறியீடுகள் அல்லது உள்நுழைவு கடவுச்சொல், இலத்திரனியல் சாதனம்/கள், தனிப்பட்ட அடையாள எண் (PIN) என்பவற்றையும் BOC Smart Remit App அணுகக் கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் இரகசியமாக வைத்திருப்பதில் நம்பிக்கையுடனும், விழிப்புடனும், அக்கறையுடன் செயற்பட வேண்டும். பாவனையாளர் தனிப்பட்ட கடவுச் சொல்லை (PIN) அல்லது ஒரு தடவை கடவுச்சொல்லை (OTP), எந்நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் வேறு எந்வொரு நபருக்கும் வெளிப்படுத்த கூடாது அல்லது கைபேசி சாதனத்தை வேறு எந்தவொரு நபரும் வைத்திருக்கவோ அல்லது அதனை கட்டுப்படுத்தவோ அனுமதிக்கக் கூடாது.

3.4 அவசியமெனில் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி தனிப்பட்ட கடவுச் சொல்லை (PIN) மாற்றியமைப்பதற்கு பாவனையாளர் உடன்படுகின்றார்.

3.5 தற்செயலாகவோ அல்லது அங்கீகரிக்கப்படாத வகையிலோ தனிப்பட்ட கடவுச் சொல் மற்றும்/அல்லது ஒரு தடவை கடவுச் சொல்லானது (OTP) வேறு எந்தவொரு நபருக்கும் வெளிப்படுத்தப்படுமாயின் பாவனையாளர் அதற்கான முழுப்

பொறுப்பினையும் ஏற்க வேண்டும். அத்துடன், தனிப்பட்ட கடவுச் சொல் (PIN) மற்றும்/அல்லது ஒரு தடவை கடவுச் சொல் (OTP) அல்லது கைபேசி சாதனமானது அங்கீகரிக்கப்படாத நோக்கங்களுக்காக மற்றும் அல்லது அதிகாரம்பெறாத நபர்களால் பயன்படுத்துகின்றமையினால் உருவாகும் இடருக்கான பொறுப்பினையும் பாவனையாளரே ஏற்கவேண்டும்.

3.6 அங்கீகரிக்கப்படாத நபர் ஒருவருக்கு தனிப்பட்ட கடவுச் சொல்லானது (PIN) வெளிப்படுத்தப்பட்டுள்ளது அல்லது அங்கீகரிக்கப்படாத முறையில் ஏதேனும் சேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது என அறிவித்தல் கிடைத்தாலோ அல்லது அதுதொடர்பாக சந்தேகம் எழுந்தாலோ பாவனையாளர் இயலுமாயின் அதனை நேரடியாகவோ அல்லது +94 112203750/54 மற்றும் +94 767225023 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தினையோ தொடர்பு கொண்டு வங்கிக்குத் தெரியப்படுத்த வேண்டும் (வழங்கப்படும் எந்தவொரு விவரத்தினையும் எழுத்துமூலமாக உறுதிப்படுத்துமாறு வங்கி பாவனையாளரை கோரலாம்). அத்துடன், அத்தகைய அறிவிப்பை வங்கி சரியாகப் பெற்றுக்கொள்ளும் வரையில், அங்கீகரிக்கப்படாத நபர்கள் மற்றும் அல்லது அங்கீகரிக்கப்படாத நோக்கங்களுக்காக BOC ரெமிட் கைபேசி கைபேசி செயலியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் பாவனையாளரே பொறுப்பேற்க வேண்டும்.

4. BOC Smart Remit App ஊடாக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள்

4.1 BOC Smart Remit App பதிவுசெய்து அதனை மெய்நிகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் பாவனையாளர் BOC ஸ்மாட் ரெமிட் கைபேசி செயலி ஊடாக வங்கிக்கு வழங்கும் எந்தவொரு அறிவுறுத்தலையும் அல்லது செய்தியையும் ஏற்பதற்கு மற்றும்/அல்லது அதன்படி செயற்படுவதற்கு வங்கிக்கு பாவனையாளர் அதிகாரம் வழங்குகிறார்.

4.2 பாவனையாளர் பயனாளரின் தகவல்களை உள்ளடக்கி BOC Smart Remit App ஊடாக சமர்ப்பித்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான மின்னஞ்சலானது பாவனையாளருக்கு அனுப்பப்படும். இருப்பினும், இந்த உறுதிப்படுத்தலானது பாவனையாளரின் பண அனுப்புதல் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அர்த்தப்படாது.

4.3 பணம் அனுப்புவதற்கான கோரிக்கை என்பது பரிவர்த்தனையொன்றை வங்கியின் பண அனுப்புதல் சேவையூடாக நிறைவேற்றும் முயற்சி மட்டுமேயாகும். அத்தகைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வது வங்கியின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளுதலானது (அ) வங்கி பாவனையாளரின் கோரிக்கையைச் செயற்படுத்துகிறது என்பதனை மின்னஞ்சல் மூலமாக உறுதிப்படுத்தியோ அல்லது (ஆ) கைபேசி செயலிக்கு அனுப்பப்படும் உறுதிப்படுத்தல் மூலமாகவோ பயனருக்குத் அறிவிக்கப்படும். (இதற்குப்பிறகு "பரிவர்த்தனை உறுதிப்படுத்தல்" என்று குறிப்பிடப்படுகின்றது).

4.4 BOC ஸ்மாட் ரெமிட் கைபேசி செயலியின் எந்தவொரு சேவையும் அல்லது பரிவர்த்தனையும் பரிவர்த்தனை உறுதிசெய்யப்பட்டதற்குப் பின்னரும்கூட பின்வரும்

காரணங்களினால் நிறைவேற்ற மறுப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது .

4.4.1 பயனாளியின் அடையாளத்தினை உறுதிப்படுத்துகின்ற திருப்திகரமான சான்றுகளை வங்கியினால் பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல்,

4.4.2 பாவனையாளர் பொய்யான, தவறான அல்லது முழுமையற்ற தகவலை வழங்கியிருத்தல்,

4.4.3 கோரிக்கைக்கு ஏற்ப வங்கிக்குப் போதுமான தகவல்களை அல்லது ஆவணங்களை வழங்காதிருத்தல்,

4.4.4 பாவனையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியிருத்தல்,

4.4.5 நிதி அனுப்புதல் கோரிக்கையானது பொருத்தமான சட்டங்கள் அல்லது விதிமுறைகளை மீறுவதாக இருத்தல் அல்லது தடைசெய்யப்பட்ட நோக்கத்திற்காக செய்யப்படுதல்,

4.4.6 வியாபார நேரங்களில் ஏற்படும் மாற்றங்கள், நாணயப் பரிமாற்றம் அல்லது நாணயம் கிடைப்பதில் உள்ள சிக்கல்கள் அல்லது ஏதேனும் பேரழிவு என்பவற்றின் காரணமாக வங்கியால் பண அனுப்புதல் கோரிக்கையைச் செயல்படுத்த முடியாதிருத்தல்,

4.4.7 இணக்க அதிகாரி பரிவர்த்தனையை நிறைவேற்றாமல் இருப்பதற்கு தீர்மானித்தல்.

4.5 4.4 ஆம் இலக்க விதிப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தர்ப்பத்தினால் பண அனுப்புதலை பண அனுப்புதல் அறிவுறுத்தலின்படி வங்கியினால் பூர்த்திசெய்ய முடியவில்லை

என்பதன் காரணமாக பாவனையாளரோ அல்லது பயனரோ அல்லது மூன்றாம் தரப்பினரோ ஏற்படுத்தும் ஏதேனும் இழப்பு அல்லது செலவு அல்லது சேதம் என்பவற்றுக்கு வங்கி பொறுப்பேற்காது.

4.6 பாவனையாளர் தனது சொந்தப் பொறுப்பிலேயே தரவு, தகவல், அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகளை வழங்குகிறார். ஸ்மாட் ரெமிட் கைபேசி செயலிக்கு அல்லது அதனுடன் தொடர்புபட்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட அனைத்துத் தரவுகளும் சரியானது மற்றும் முழுமையானது என்பதனை பாவனையாளர் உறுதி செய்வார். ஏதேனும் பிழை அல்லது வேறுபாடு அல்லது விடுபாடு என்பவற்றை பாவனையாளர் உடனடியாக வங்கிக்கு தெரியப்படுத்துவார்.

4.7 BOC Smart Remit App பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் பாவனையாளரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அத்துடன், BOC ஸ்மாட் ரெமிட் App பயன்படுத்தி பாவனையாளர் செயற்படுத்திய அல்லது நடைமுறைப்படுத்திய அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் வங்கி எந்த வகையிலும் பொறுப்பாகாது என்பதனை பாவனையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

4.8 BOC Smart Remit App பயன்படுத்தி நிறைவேற்றப்படும் அல்லது செயற்படுத்தப்படும் அனைத்து விண்ணப்பங்கள், படிவங்கள், கணக்கு முடிவுறுத்தும் கடிதங்கள், இழப்பீட்டுக் கடிதங்கள் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) வங்கிக் கணக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பான அனைத்து ஆவணங்களுக்குமான முழுப் பொறுப்பையும் பாவனையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4.9 BOC Smart Remit App பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனையின் தொகையையும் பாவனையாளருக்கு தெரிந்தோ தெரியாமலோ அல்லது பாவனையாளரின் மேலதிக அனுமதியுடனோ அனுமதி இல்லாமலோ அவரின் கணக்கு/கணக்குகளிலிருந்து (இச்செயலியை பயன்படுத்தும் காலத்தில் காணப்படும் கணக்குகள் அல்லது பின்னர் ஆரம்பிக்கப்பட்டு இச்செயலியுடன் பாவனையாளரால் இணைக்கப்பட்ட கணக்குகள்) பற்றுவைப்பதற்கு பாவனையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார்.

4.10 கணக்கில்/கணக்குகளில் போதியளவு பணம் இல்லாவிடின் பாவனையாளர் Smart Remit App மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முயற்சித்தல் ஆகாது. பாவனையாளரால் எதிர்காலப் பரிவர்த்தனைக்காக அட்டவணைப்படுத்தப்படும் திகதியில் அவரின் கணக்கில் போதியளவு பணமிருந்தால் மட்டுமே குறித்த பரிவர்த்தனை வங்கியால் நிறைவேற்றப்படும் என்பதையும் பாவனையாளரிடமிருந்து கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் கிடைக்கும் திகதியில் மற்றும்/அல்லது அவ்வாறு கொடுப்பனவுகளை செலுத்தவேண்டிய நேரத்தில் வாடிக்கையாளர்களால் குறித்தொதுக்கப்பட்ட கணக்கில் / கணக்குகளில் போதிய பணம் இல்லாவிடின் பாவனையாளரின் அத்தகைய கொடுப்பனவு அறிவுறுத்தல்களை நிறைவேற்ற வேண்டிய எந்தவொரு கடப்பாடும் வங்கிக்கு இல்லை என்பதையும் பாவனையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

4.11 பாவனையாளரால் வழங்கப்படும் கோரிக்கைகள் / அறிவுறுத்தல்கள் வங்கியின் அதிகாரியின் அல்லது அதிகாரிகளின் ஒப்புதலுக்கு உட்பட்டவை என்பதையும் ஆகவே

அவற்றை உடனடியாகவும் கணினி அமைப்பின் தன்னியக்க வசதி ஊடாகவும் செயற்படுத்த முடியாமல் போகலாம் என்பதையும் பாவனையாளர் ஏற்றுக்கொள்கின்றார். மேலும், தன் தற்றுணிபின் அடிப்படையில் அக்கோரிக்கைகளை பாவனையாளருக்கு எந்தவிதமான அறிவித்தலையும் வழங்காது அனுமதிக்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

4.12 பிற வங்கிகளின்/ நிதி நிறுவனங்களின் கொடுப்பனவு சாதனங்களை BOC Smart Remit App பாவனையாளர்கள் இணைக்கலாம். கொடுப்பனவு சாதனம் BOC Smart Remit App வெற்றிகரமாக இணைக்கப்பட்டதும் பாவனையாளருக்கு BOC Smart Remit App சேவைகளை வழங்குவதற்கு குறித்த கணக்கின் அல்லது அட்டையின் இலக்கங்கள் தேவைப்படலாம் என்பதால் வங்கி அவற்றைச் சேமித்து வைத்துக்கொள்ளும். கொடுப்பனவு சாதனங்கள் தொடர்பில் பாவனையாளருக்கும் அத்தகைய பிற வங்கி / நிதி நிறுவனத்திற்குமிடையில் காணப்படும் எந்தவொரு உடன்படிக்கையிலும் வங்கி ஒரு தரப்பு ஆகாது என்பதையும் கடன் வழங்குவதிலும் கடனுக்கான தகுதியை நிர்ணயிப்பதிலும் வங்கி ஈடுபடாது என்பதையும் பாவனையாளர் ஏற்றுக்கொள்கிறார். மேலும், வங்கி பாவனையாளரை பிரதிநிதித்துவப்படுத்தாது அல்லது அவ்வாறான எந்தவொரு கொடுப்பனவு சாதனமும் சரியாகப் பேணப்படுகிறது எனவோ அல்லது குறித்த வங்கி / நிதி நிறுவனம் BOC Smart Remit App ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவை அனுமதிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் எனவோ உறுதிப்படுத்தாது.

4.13 பணம் அனுப்பும் கோரிக்கை விடுக்கப்படும் நேரத்தில் சேவைக்கான அறவீடுகள், தரகுப்பணம், கட்டணங்கள், செலவுகள் மற்றும் பொருத்தமான பணப்பரிமாற்று விகிதங்கள் என்பன காட்சிப்படுத்தப்படும். அவ்வாறு காட்சிப்படுத்தப்படும் அனைத்துக் கட்டணங்களையும் தனது கணக்கில் / கணக்குகளிலிருந்து வங்கி பற்று வைப்பதற்கு பாவனையாளர் இத்தால் அனுமதிக்கின்றார்.

5. இரத்துச் செய்தலும் பணத்தை மீளளித்தலும்

5.1 பண அனுப்பல் மறுதலிக்கப்படுமிடத்து, தொடர்பு வங்கியிடமிருந்து உண்மையில் கிடைக்கப்பெற்ற தொகையின் அடிப்படையிலும் பணம் மீளளிக்கப்படும் திகதியில் வங்கியின் பணப் பரிமாற்ற விற்பனை வீதத்தின் அடிப்படையிலும் மட்டுமே மீளளிப்பு செய்யப்படும். மீளளிப்பின் பெறுமதி பணத்தைப் பெறுபவருக்கு அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட்ட தொகைக்கு சமமானதாக இருக்காது.

5.2 பாவனையாளர் பணத்தைப் பெறுபவரின் விபரங்களை மாற்றி மறுதலிக்கப்பட்ட பண அனுப்புதலை மீண்டும் செயற்படுத்த விரும்பின் அவர் பயனாளரின் விபரங்களை மாற்றிவிட்டு கொடுப்பனவைச் செயற்படுத்த முடியும். பாவனையாளர் மறுதலிக்கப்பட்ட பண அனுப்புதலை மீண்டும் செயற்படுத்த விரும்பாதவிடத்து அவர்கள் பண மீளளிப்பைக் கோர முடியும். மீளளிப்புச் செயன்முறைக்கு கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து 5 தொடக்கம் 7 வேலை நாட்கள் எடுக்கலாம்.

6. இரகசியத்தன்மையும் தரவுப் பாதுகாப்பும்

6.1 பாவனையாளர் செயலிக்குள் நுழைவதற்கான இரகசியக் குறியீட்டு இலக்கத்தையும் (PIN) அதற்கான ஒருநேரக் கடவுச்சொல்லையும் மிகவும் இரகசியமாகப் பேண வேண்டும் என்பதோடு அவ்விலக்கங்களை அல்லது தகவல்களை எந்த நேரத்திலும் அல்லது எச்சூழ்நிலையிலும் எந்தவொரு நபருக்கும் வெளிப்படுத்தமாட்டேன் என உறுதியளிக்க வேண்டும்.

6.2 பாவனையாளர் BOC Smart Remit App தொடர்பான அனைத்து தகவல்கள், நுட்பங்கள், தரவுகள் மற்றும் வடிவமைப்புகள் என்பவற்றை இரகசியமாகப் பேண வேண்டும். இவற்றில் எதனையேனும் பாவனையாளர் எந்தவொரு தரப்பினருக்கும் வெளிப்படுத்தலாகாது.

6.3 இரகசியத்தன்மை தொடர்பான பாவனையாளரின் கடப்பாடுகள் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதோடு செயலி காலாவதியாகும்போதும்கூட அல்லது முடிவுறுத்தப்படும்போதும்கூட அக்கடப்பாடுகளை கைவிடலாகாது.

6.4 உரிய சட்ட திட்டங்களின் கீழ் வாடிக்கையாளர்கள் / பாவனையாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெறும், உறுதிசெய்யும், பதிவுசெய்யும் சட்ட ரீதியான தேவைப்பாடு வங்கிக்கு உண்டு. ஆகவே, இச்சேவைகளைப் பாவனையாளருக்கு வழங்கும்போது பாவனையாளரின் தனிப்பட்ட தரவுகளைப் பெற்று உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய தரப்பினருடன் ஆலோசிக்குமாறு வங்கி பாவனையாளர்களைக் கேட்டுக்கொள்கின்றது.

6.5 பாவனையாளரின் தனிப்பட்ட தகவல்கள் உரிய சட்ட திட்டங்களுக்கு அமைய பாதுகாப்பாகவும் மிகுந்த கவனத்துடனும் கையாளப்படும்.

6.6 சட்டம், நீதிமன்றக் கட்டளை, ஏதேனும் நியதிச் சட்டங்கள், சட்ட அல்லது ஒழுங்குமுறைத தேவைப்பாடுகள், பொலிஸ / குற்றத்தடுப்பு அல்லது குற்றப் புலனாய்வுடன் தொடர்புபட்ட தகுதிவாய்ந்த அதிகார மையங்கள என்பவற்றால் தேவைப்படுத்தப்படுமிடத்த அல்லது ஊழல், பணமோசடி, பயங்கரவாதத்திற்கான நிதியுதவி என்பவற்றை ஒழிப்பதற்கு உதவும் முகமாக பாவனையாளர் பற்றிய தகவகல்களை வங்கி வெளியிடக்கூடும். மேலும் வங்கியானது சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் குறித்து உரிய சட்ட அமலாக்கத் துறைக்கு அல்லது அரச அதிகார மையங்களுக்கு முறையிடவும் கூடும்.

6.7 பாவனையாளர்கள் பணமோசடித் தடுப்பு, பயங்கரவாதத்திற்கான நிதியுதவி ஒழிப்பு, தரவுப் பாதுகாப்பு உள்ளிட்ட தொடர்புபட்ட சட்டங்களுக்கு அமைய தனிப்பட்ட தரவுகள எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன, பேணி வைக்கப்படுகின்றன, பயன்படுத்தப்படுகின்றன என்பவை தொடர்பில் அறிந்துகொள்ள www.boc.lk என்ற இலங்கை வங்கியின் இணையத்தளத்தின் ஊடாக இரகசியத்தன்மை பற்றிய அறிக்கையை வாசித்து விளங்கிக் கொள்ளவேண்டும்.

7. இழப்பு அல்லது தாமதம்

7. 1 எக்காரணத்திற்காகவும் BOC Smart Remit App தொடர்பில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளாமையால்

மற்றும் / அல்லது பின்பற்றாமையால் ஏற்படக்கூடிய இழப்புகள் அல்லது நட்டங்கள் அல்லது ஏதேனும் இலாப இழப்புகள், ஒப்பந்த இழப்புகள், பொருளாதார இழப்புகள் மற்றும் தரவு இழப்புகள் அல்லது மதிப்பிழப்புகள் என்பவற்றுக்கு வங்கி பொறுப்பாகாது.

8. முறைப்பாடுகளும் இரத்துச் செய்தலும்

8.1 வங்கியின் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் இணையத்தளத்தின் ஊடாக அல்லது 011 – 2204750/4751/4752 என்ற இலக்கங்களினூடாக வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவப் பிரிவினை நேரடியாக தொடர்பு கொள்வதன் ஊடாக அல்லது முகாமையாளர், வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவப் பிரிவு, இலங்கை வங்கி 22 ஆம் மாடி, இலங்கை வங்கிச் சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு அஞ்சல் ஊடாக மேற்கொள்ளப்பட முடியும்.

8.2 குறுஞ்செய்திகள், மின்னஞ்சல் அல்லது ஏனைய ஏதேனும் பொருத்தமான வழிகளில் முன்னறிவித்தலொன்றை வழங்கி Smart Remit App இரத்துச் செய்யும் அல்லது மீளப்பெற்றுக்கொள்ளும் முழு உரிமையும் வங்கிக்கு உண்டு. Smart Remit App முடிவுறுத்துவதற்கு பாவனையாளர் தீர்மானிக்குமிடத்து அவர் 7 நாட்களுக்கு குறையாத எழுத்து மூல முன்னறிவித்தலை வழங்க வேண்டும் என்பதோடு Smart Remit App தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் உடனடியாக வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும்.

9. உடைமை உரிமையும் ஏனைய உரிமைகளும்

9.1 BOC Smart Remit App எப்போதும் இலங்கை வங்கியின் சொத்தாகவே இருக்கும் என்பதை பாவனையாளர் ஏற்றுக்கொள்கிறார். அத்தோடு BOC Smart Remit App அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தகவல்கள், நுட்பங்கள், தரவுகள், அல்லது வடிவமைப்புகள் என்பவற்றையும் பாவனையாளர் பிரதிசெய்தலாகாது.

10. இழப்பெதிர் காப்பு

10.1 பாவனையாளர் BOC Smart Remit App பயன்படுத்துவதன் காரணமாக வங்கிக்கு ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய அல்லது நிகழக்கூடிய அல்லது வங்கி முகங்கொடுக்க நேரிடும் எந்தவொரு இழப்பு, அறவீடு, வழக்கு, உரிமைகோரல், செலவுகள், நட்டங்கள் என்பவற்றாலும் வங்கி இரகசிய குறியீட்டு இலக்கத்தை உருவாக்குவதால் மற்றும்/ அல்லது வழங்குவதால் ஏற்படக்கூடிய இழப்புகள் மற்றும்/அல்லது இலத்திரனியல்வழியாக அனுப்பும்போது தரவுகள் வேறிடத்துக்கு அனுப்பப்படுதல் என்பவற்றாலும் பாதிப்புறாத வண்ணம் எப்போதும் வங்கியை பாதுகாப்பதற்கு பாவனையாளர் இத்தால் இணங்குகின்றார்.

10.2 BOC Smart Remit App சேவையின்கீழ் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு பரிவத்தனைத் தரவு உறுதிப்படுத்தல் / மீள உறுதிப்படுத்துதல் தேவைப்பாடுகளை வாடிக்கையாளர்கள் நிறைவேற்ற வேண்டும். அத்தகைய உறுதிப்படுத்தலை / மீள உறுதிப்படுத்தலை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர் ஒருநேரக் கடவுச்சொல் தரவுகளை அல்லது வாடிக்கையாளர் அடையாள தரவுகளை பயன்படுத்தக்கூடும்.

10.3 செயலிக்கு சரியான தகவல்களை வழங்குவது வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

10.4 பதிவின்போது BOC Smart Remit App தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் வாடிக்கையாளர் குறித்த செயலியினால் வழங்கப்படும் நிதிசார் மற்றும் நிதிசாரா பரிவர்த்னைகளின் பொருட்டு BOC Smart Remit App சேவைகளை பயன்படுத்த வாடிக்கையாளர்கள் இணங்குகின்றார்.

11. ஆளும் சட்டமும் பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறையும்

11.1 BOC Smart Remit App மற்றும்/ அல்லது அதன் விதிகள் நிபந்தனைகள் அல்லது அவற்றின் பொருள்கோடல்கள் அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட தரப்பினரின் உரிமைகள், கடப்பாடுகள் அல்லது பொறுப்புகள் அல்லது அவற்றின் தொழிற்பாடு, மீறல்கள், முடிவுறுத்தல்கள் அல்லது செல்லுபடியற்றதன்மை என்பவற்றிலிருந்து அல்லது என்பவை தொடர்பில் எழும் ஐயங்கள், கருத்து வேறுபாடுகள், பிணக்குகள், முரண்பாடுகள் அல்லது உரிமை கோரல்கள் என்பன முதலில் வங்கிக்கும் பாவனையாளருக்குமிடையிலான பேச்சுவார்த்தையூடாகத் தீர்க்கப்படவேண்டும். பேச்சுவார்த்தை தோல்வியில் முடியுமிடத்து அத்தகைய பிணக்குகள் இவ்வுடன்படிக்கை தொடர்பான எந்தவொரு பிணக்கையும் தீர்த்துவைக்கும் பூரண நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள இலங்கை நீதிமன்றங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

BOC ஸ்மார்ட் ரெமிட் மொபைல் செயலி தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பயனரான நான் படித்துப் புரிந்துகொண்டுள்ளேன். மேலும், மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு BOC ஸ்மார்ட் ரெமிட் மொபைல் செயலியைச் செயல்படுத்தவும் பயன்படுத்தவும் ஒப்புக்கொள்கிறேன். மேலும், அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியவும் ஒப்புக்கொள்கிறேன்.

பாதுகாப்பான பணம் அனுப்பும் சேவைகளை வழங்குவதற்கும், சட்டத் தேவைகளுக்கு இணங்குவதற்கும், எனது அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் எனது பெயர், தொடர்பு விவரங்கள், அடையாள விவரங்கள், நிதித் தரவு மற்றும் எனது படங்கள் உள்ளிட்ட எனது தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்துவதற்கு இதன் மூலம் நான் வெளிப்படையாக ஒப்புதல் அளிக்கிறேன். எனது தரவு தொழில்துறை தரநிலை பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாதுகாக்கப்படும், தேவைக்கேற்ப மட்டுமே தக்கவைக்கப்படும், மேலும் சேவை வழங்கலுக்கு சட்டப்பூர்வமாக தேவைப்படும்போது அல்லது அவசியமானபோது மட்டுமே பகிரப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். எனது தரவை அணுக, திருத்த அல்லது நீக்க, ஒப்புதலைத் திரும்பப் பெற அல்லது தேவைப்பட்டால் புகார்களைத் தாக்கல் செய்ய எனக்கு உள்ள உரிமைகள் குறித்து எனக்குத் தெரியும்.

தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதற்கு நான் எனது ஒப்புதலை வழங்கவில்லை